செ.வெ.எண்.501/2021 நாள்.03.11.2021

# திருப்பத்தூர் மாவட்டம் கதிரிமங்கலம் ஊராட்சி ரூ.1.53 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுவரும் தனிநபர் பண்ணைக்குட்டை பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

திருப்பத்தூர் மாவட்டம் கதிரிமங்கலம் ஊராட்சி ரூ.1.53 இலட்சம் மதிப்பீட்டில் 15 மீட்டர் அகலமும் 15 மீட்டர் நீளமும் 1.5 மீட்டர் ஆழமும் ஆகிய அளவுகளில் அமைக்கப்பட்டுவரும் தனிநபர் பண்ணைக்குட்டை பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித்திட்டத்தின் கீழ் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 169 விவசாயிகளுக்கும், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தில் 81 விவசாயிகளுக்கும், ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 116 விவசாயிகளுக்கும், கந்திலி ஊராட்சி ஒன்றியத்தில் 129 விவசாயிகளுக்கும், மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தில் 124 விவசாயிகளுக்கும், நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் 98 விவசாயிகளுக்கும் என மொத்தம் 717 விவசாயிகளுக்கு தனிநபர் பண்ணை குட்டை அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிகளுக்காக 6 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 717 விவசாயிகளுக்கு தனிநபர் பண்ணை குட்டை அமைப்பதற்கு ரூ.10 கோடியே 97 இலட்சம் வழங்கப்படவுள்ளது. மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பணிகளும் விரைவில் முடிக்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.செல்வராசு, உதவி திட்ட அலுவலர் திருமதி.விஜயகுமாரி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பிரேம்குமார், திரு.சந்திரன், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் திருமதி.இலலிதா மோகன்குமார், ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.மாரி இளையராஜா, ஊராட்சி மன்ற துணை தலைவர் திரு.வடிவேல் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**